RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-222928

OPEN ACCESS

# உளப்பகுப்பாய்வில் மாமர சூரபன்மனும் முருகனின் பங்காளிக் காய்ச்சலும்

ஆர். முத்துராஜன் [அ, *]

[அ] தமிழியல்துறை, அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா.

# Mamara Soorapanman and Murugan's partner fever in Ulapaguppai

R. Muthurajan [a, *]

[a] Department of Tamil, Alagappa Government Arts College, Karaikudi-630003, Coimbatore, Tamil Nadu, India

* Corresponding Author:
dr.srmuthurajan@gmail.com

Received: 21-09-2022
Revised: 10-11-2022
Accepted: 17-11-2022
Published: 05-12-2022

**ABSTRACT**

Murugan worship is seen as an ancient form of worship in Tamil land. Ganesha's place in this worship has not continued. The literature also does not give a record about Ganesha worship, so it can be seen that the relationship between Murugan and Ganesha was planned and established. But in the rise of devotional literature, Murugan and Ganesha have been brought to the stage of brotherhood. There is a problem between them because of a single fruit called mango. Murugan gets angry with his parents and goes to Palanimalai to stabilize his existence. According to Puranas, Surapaduman, who was standing as a tree after giving suffering to the gods, fell into two parts and turned one into a roofed peacock and the other into a roofed rooster. Muruga, who had lost the mango to Vinayaka, felled the mango tree itself, for felling Surapaduman who was standing as a mango tree. What is the reason for this? How has Murugan's mental discrimination reacted in this place? This article aims to identify and explain all this in detail.

**Keywords:** Murugan Worship, Sangam Literature, Palanimalai, Devotional Literature

## முன்னுரை

தமிழ் நிலத்தில் தொன்மையான வழிபாடாக முருகன் வழிபாடு பார்க்கப்படுகின்றது. இந்த வழிபாட்டில் விநாயகருக்கான இடம் தொடர் இருத்தலைக் கொள்ளவில்லை. இலக்கியங்களும் அது குறித்தப் பதிவைத் தெரிவிக்கவில்லை. இதனால் முருகன், விநாயகர் சகோதர உறவு நிலைக் கட்டு திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட ஒன்று எனத் தெரிய முடிகின்றது. ஆனால் பக்தி இலக்கிய எழுச்சியில் முருகன், விநாயகர் சகோதர உறவு நிலைக் கட்டில் கொண்டு வரப்பட்டிருக்கின்றார். இக்கட்டில் மாம்பழம் என்ற ஒற்றைப் பொருளால் அவர்களுக்குள் சிக்கல் எழுகின்றது. முருகன் பெற்றோருடன் கோபம் கொண்டு பழநிமலை சென்று, தன் இருப்பை நிலை நிறுத்திக் கொள்கின்றார். தேவர்களுக்கு இன்னல் கொடுத்து மாமரமாக நின்ற சூரபதுமனை இரு கூறாக வீழ்த்தி ஒரு கூரை மயிலாகவும் மற்றொரு கூரை சேவலாகவும் ஆக்கிக் கொண்டார் எனப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. மாமரமாக நின்ற சூரபதுனை வீழ்த்தியதற்கு விநாயகரிடம் மாம்பழத்தில் தோற்ற முருகன் மாமரத்தையே வீழ்த்தியிருக்கிறார். இதற்கான காரணம் யாது? முருகனின் உளப்பாகுபாடு இவ்விடத்தில் எவ்விதம் வினையாற்றியிருக்கின்றது? போன்றவற்றைக் கண்டறிந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முருகன்

முருகன் என்ற சொல் தமிழ் நில மக்களின் மனதின் அடியாழ் நிலையில் வேரோடிய சொல்லாகும். இச்சொல் இன்றளவிலும் மக்களின் பயன்படு பொருள்களில் ஒன்றைப் போல் ஊடாடியிருக்கின்றது. மனித உடலில் இயற்கையாக எழும் தும்மலில் கூட முருகன் என்ற பெயர் உச்சரிக்கப் பெறுகின்றது. முருகன் என்ற இச்சொல் திருமுருகாற்றுப்படை வெண்பா (7-1, 10-3), பரிபாடல் (8-81), அகநானூறு (59-11, 98-10, 158-16), புறநானூறு (23-4) ஆகியவற்றில் காணப்படுகின்றது. முருகன் கோட்டம் என்ற சொல் புறநானூற்றிலும் (299-6) முருகன் நற்போர் என்ற சொல் அகநானூற்றிலும் (1-3) முருகாற்றுப்படுத்த என்ற சொல் திருமுருகாற்றுப்படை (244), அகநானூறு (22-11), போன்றவற்றிலும் காணப்படுகின்றன.

முருகு என்ற சொல் மதுரைக்காஞ்சி (39, 181, 611, 724), பட்டினப்பாலை (37), நற்றிணை (34-11, 47-10), குறுந்தொகை (362-1), ஐங்குறுநூறு (245-3, 247-3, 249-2, 308-4), பதிற்றுப்பத்து (26-12), பரிபாடல் (8-65, 21-51), அகநானூறு (28-6, 118-5, 137-8, 138-10, 232-14, 272-13, 288-4), புறநானூறு (56-14), திணைமொழி (46-1), திணைமாலை (36-1), சிலப்பதிகாரம் (27-236), மணிமேகலை (19-94) போன்றவற்றில் காணப்படுகின்றது.

இதைப்போல முருகு புணர்ந்தியன்ற வள்ளி என்ற சொல் நற்றிணையிலும் (82-4) முருகுறழ் முன்பு என்ற சொல் நற்றிணை (225-1), அகநானூறு (181-6) போன்றவற்றிலும் முருகு மெய்ப்பட்ட புலைத்தி என்ற சொல் புறநானூற்றிலும் (259-5) முருக என்ற சொல் திருமுருகாற்றுப்படை (269), பரிபாடல் (5-50) போன்றவற்றிலும் முருகச் செவ்வி என்ற சொல் மணிமேகலையிலும் (5-14) முருகச் சீற்றம் என்ற சொல் பொருநராற்றுப்படை (131), புறநானூறு (16-12) போன்றவற்றிலும் காணப்படுகின்றன. நற்றிணையில் முருகன் புணர்ந்த வள்ளி என்ற சொல் இடம் பெற்றிருக்கின்றது. வள்ளியைப் போல தெய்வானை என்ற சொல் இடம் பெறவில்லை.

சங்க இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் முருகனின் சிறப்புகளை மிகுதியாக எடுத்து இயம்புகின்றன.

தொல்காப்பியர் "சேயோன் மேய மைவரை உலகம்" எனக் குறிப்பிடுகின்றார். நானிலப் பாகுபாட்டில் குறிஞ்சிக்குரிய முதனிலைக் கடவுளாக முருகனை அறிமுகம் செய்கின்றார் தொலகாப்பியர். இவர் முருகன் என்று சுட்டாது "சேயோன்" எனக் குறிப்பிடுகின்றார். சோயோன் என்பதற்குத் "தூரத்தில் இருப்பவன்" என்பது பொருளாகும். இந்த தூரம் எங்கிருந்து தொடங்குகின்றது? எவ்விடத்தில் முடிகின்றது? என்ற குறிப்புகள் இல்லை. ஊராரின் வாழ்வியல் தளத்திலிருந்து விலகி தொலைவேற்றுத் தளத்தில் உள்ளவன் முருகன் என்பதாக இதன் பொருள் அமைந்திருக்கின்றது. (ஊரின் எல்லை கடந்து தொலை வெளித் தளத்தில் இருந்தவர்கள் சமண பௌத்தர்களே ஆவர். இது தனித்தப் பார்வையாகும்) தொல்காப்பியர் காலத்தில் நெடுந்தொலைவில் இருந்த முருகன் செவ்வியல் நெறிக்குள் வந்தபின் ஊராரின் வாழ்வியல் தளத்தருகில் வரத் தொடங்கியிருக்கிறார். இந்த நெருக்கம் பெருங்கோயில்களாக மாறுவது வரை தொடர்ந்திருக்கின்றது. முருகன் செவ்விய கோயில்களில் பரிவார தெய்வமாக இதுவரை இடம் பெறவில்லை. மூல தெய்வமாகவே வீற்றிருக்கின்றார். இது முருகனின் செவ்வியல் தன்மையையும் சார்புநிலை அற்ற சுயம்புவையும் எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ் நாட்டு ஆண் தெய்வங்கள் பெரும்பாலும் சிவனாக (சுடலைமாடன், கருப்பசாமி) அல்லது சிவ மகனாக (ஐயனார், ஐயப்பன், முருகன், விநாயகர்) அல்லது சிவகணங்களின் தொகுதியின் (நந்தி, வீரபத்திரன்) வடிவமாகவேதான் காட்டப்பெறுகின்றன. இது ஒரு விதமான மேனிலையாக்கக் கோட்பாடாகும். மேல்நிலையாக்கக் கோட்பாடு வருவதற்கு முன் அதாவது சிவன் தமிழ் நிலத்திற்கு வருவதற்குமுன் தமிழ் நிலத்தில் நாட்டாரோடு இணைந்து இருந்த ஆண் தெய்வங்களையே சிவனாக, சிவனின் மகனாக, சிவக் கணமாக ஆக்கியிருக்கின்றனர். அந்த ஆக்களில் ஒன்றுதான் முருகன் சிவனின் மகன் என்ற கோட்பாடும் ஆகும்.

முருக வழிபாட்டின் தொடக்கம் இயற்கை வழிபாட்டிலிருந்தே தொடங்குகின்றது. இயற்கை வழிபாட்டில் முதலாவதாக இடம் பெறுவது சூரிய வழிபாடாகும். சூரிய வழிபாடே பின்னாளில் முருக வழிபாடாக மாறியிருக்கின்றது. "மாக்கடலிலிருந்து நிவந்தெழுந்த இளஞாயிற்றின் இயற்கை அழகில்

உள்ளம் தோய்ந்த அன்பர்கள் அதனையே இறையனெ வழிபட்டு வணங்கினர். அதுவே பின்னர் நீலமயில் மீது வீற்றிருக்கும் செவ்வேள் வழிபாடாக மலர்ந்தது" (1990) என்கிறார் கோ.சாரங்கபாணி. இயற்கை வழிபாட்டில் இருந்து முகிழ்ந்த ஒன்றிற்கு சிவன் தந்தையாக ஆவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. இதனால் தமிழ் நிலத்தில் முருகன் கொண்ட செல்வாக்கையும் அவர் டியவரின் திரளையும் சிவன் பெறுவதற்கு சிவனார்கள் கொண்ட உத்தியே சிவனின் மகன் என்ற கோட்பாடாகும். சிவனின் மகன் என்பது சிவனைத் தமிழ் நிலத்தில் செல்வாக்கடைய செய்வதற்கும் முருகனின் அடியவர்களின் திரளை சிவன் பெறுவதற்குமான ஒரு முயற்சி என்ற அளவில் இதைப் பார்க்கவும் முடிகின்றது.

முருகனை இலக்கியங்கள் செவ்வேள் எனக் குறிப்பிடுகின்றன. இதில் வரும் வேள் என்பது காமனுக்கும் பெயராகி காமவேள் என வந்திருக்கின்றது. "வேள் என்ற சொல்லிற்கு விரும்புதல் என்னும் பொருளுடையது. விரும்பப்படும் தன்மையினைக் கொண்டுள்ளதால் முருகன் வேள் என அழைக்கப்படுகின்றான். வேள் என்ற சொல்லினைப் போன்றே வேண்டும், வேண்டாம், வேண்டாமை, வேண்டார், வேண்டி, வேண்டியவர், வேட்டை, வேடர் என்னும் சொற்களும் விரும்புதல் என்னும் பொருள் அடிப்படையில் தோன்றியுள்ளன" (என்கிறார் ஜெபக்கனி செல்வராஜ் (Jebakani Selvaraj, 1990). அதைப்போல வேள் என்னும் சொல்லிற்குத் திருமணம் என்ற பொருள் இருப்பதை தமிழ் லெக்சிகனும் (தொகுதி 6, 3842) பதிவு செய்கின்றது. முருகனுக்கு மணவேள் (8.61) என்ற பெயரும் உண்டு. அதைப்போல வேட்டல் என்ற சொல்லும் திருமணத்தைக் குறிக்கின்றது. இதனால் வேள் என்ற நெடுவேள் என்பது முருகன் வைத்திருக்கின்ற வேள் என்ற ஆயுதம் எனவும் செவ்வேள் என்பது போர்களத்தில் இரத்த சிகப்புடன் வேளை வைத்திருக்கின்ற முருகன் எனவும் மணவேள் என்பது திருமணக் கோலம் கொண்ட முருகன் எனவும் பொருள் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

## விநாயகர்

விநாயகர் உருவாக்கம் பார்வதியால் நடைபெற்றதாக வழக்காற்றுச் செய்திகள் பதிவு செய்கின்றன. தன் உடல் அழுக்குகளைத் திரட்டி உருவம் செய்து உயிர் கொடுத்ததாக ஒரு வழக்காறும் சந்தனத்தைத் திரட்டி உரு செய்து உயிர் கொடுத்ததாக ஒரு வழக்காறும் என இரு கதை வடிவங்கள் சமூகத்தில் காணப்படுகின்றன. அரசமரத்தடிக்கு அடியில் விநாயகர் தொடர்ந்து வழிபடப்படுவதாலும் விநாயகர் என்ற பெயர் புத்தரின் பெயர்களுள் ஒன்று என்பதாலும் விநாயகர் என்ற வழிபாட்டு மரபு பௌத்த சமயத்திற்கு உரியது என்ற வாதமும் முன்வைக்கப் பெறுகின்றது. பௌத்த சமயம் வீழ்ச்சிக்குப் பின் விநாயகர் சிவக்குடும்ப உறுப்பினராகிரார் என்பதை புராணக் கதைகளிலிருந்து அறியமுடிகின்றது.

ஒருவரைப் பற்றியக் கதை வடிவங்களே அவரை அடிநிலை மக்கள் வரை கொண்டு சேர்க்கும் என்ற உளவியல் இதுபோன்ற கதைகளை அன்று உருவாக்க வைத்திருக்கின்றது. சிவனையும் சிவனின் உறுப்பினர்களையும் பக்திப் பரப்பாளர்கள் கதை வடிவிலேயே கொண்டு சேர்த்திருக்கின்றனர். இதை சிவன், விநாயகர் குறித்தக் கதைகளிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. விநாயகர் குறித்தக் கதை வடிவங்கள் தமிழ் நிலத்தில் தனியாக அமையாமல் முருகனோடு பயணிப்பதாகவே காட்டப்பட்டிருக்கின்றது. இது முருகனின் செல்வாக்கை விநாயகரும் பெறவேண்டும் என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

## மாமரம் - மாம்பழம் புராணக் கதை வடிவங்கள்

மாம்பழம் தொடர்பான கதைக்கூறுகள் தமிழ் நிலத்தில் மிகுதியாகக் காணக்கிடக்கின்றன. அவற்றுள் ஐந்து நிகழ்வுகளை முக்கியமானதாகக் குறிப்பிடலாம்.

1. நன்னன் வீழ்ச்சிக்குக் காரணான மாம்பழம்
2. காரைக்கால் அம்மையார் பிரிவிற்குக் காரணமான மாம்பழம்
3. காமன் வழிபாட்டில் மாமரம் - மாம்பூ

4. ஈடிபஸ் சிக்கலில் மாம்பழம்
5. சிவக்குடும்பப் பிரிவினைக்குக் காரணமான மாம்பழம்

## நன்னனும் மாம்பழமும்

பூழி நாட்டை ஆண்ட மன்னன் நன்னன் எனக் குறுந்தொகை குறிப்பிடுகின்றது. “பெண் கொலை புரிந்த நன்னன்” என்ற பெயரும் “நன்னன்சேய் நனனன்” என்ற பெயரும் இவனுக்கு இருப்பதாக இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. நன்னனின் காவல் (பாண்டியர்களுக்கு வேப்பமரம் போன்று) மரம் மா மரமாகும். இதனால் இம்மரம் புனிதமாக அவனின் ஆட்சிப் பகுதியில் பார்க்கப்படுகின்றது. ஒரு மரத்தின் மாங்கனி தானாகப் பழுத்துத் தானே அருகில் ஓடிய நீரோடையில் விழுகின்றது. அந்நீரோடையில் குளிக்கச் சென்ற பெண்ணொருத்தி, அந்த மாம்பழத்தை எடுத்து உண்டு விடுகின்றாள். இது காவலர்களால் கவனிக்கப்பட்டு அரசனிடம் அவள் அழைத்து வரப்படுகிறாள். அரசன் அவளுக்கு மரண தண்டனை விதிக்கிறான். அப்பெண் செய்த தவறிற்காக அவளின் தந்தை 81 (ஒன்பதிற்று 9x9) ஆண் யானைகளையும் தன் பெண்ணின் எடைக்கு நிகராகத் தங்கத்தையும் (பொற்பாவை) தருவதாக உரைக்கின்றான். அதற்கெல்லாம் உடன்படாது, அப்பெண்ணிற்கு மரண தண்டனை விதிக்கிறான் நன்னன். இதை அறிந்தத் தமிழ்ப் புலவர்கள் நன்னனை இனிப் புகழ்ந்து பாடுவதில்லை என்ற கொள்கை முடிவை எடுக்கின்றனர். கோசர்கள், புலவர்கள் போல் வேடம் புனைந்து நன்னன் அரண்மனை சென்று அவனைப் புகழ்ந்து பாடி, ஆண் யானையைப் பரிசாகப் பெறுகின்றனர். அந்த யானையை நன்னனின் காவல் மரமாகிய மாமரத்தில் கட்டி, அந்த மரத்தை முறிக்கச் செய்கின்றனர். இதைக் கண்ட நன்னன் அவர்களுடன் போர் செய்கின்றான். அந்தப் போரில் அவன் கொல்லப்படுகின்றான். இந்த செய்தியை குறுந்தொகை 292 பாடல் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

## காரைக்கால் அம்மையாரும் மாம்பழமும்

காரைக்காலில் “மாங்கனி இறைத்தல்” என்ற விழா ஒவ்வொரு ஆண்டும் சூன் மாதம் நடத்தப்படுகின்றது. விழாவின் நான்காவது நாள் இது நடைபெறுகின்றது. மாங்கனி இறைத்தல் சடங்கிற்கும் காரைக்கால் அம்மையாருக்குமான தொடர்பு குறித்தக் கதை ஒன்று பேசப்படுகின்றது. இதைத் திருச்செல்வி குறிப்பிடுகின்றார். “ஒருநாள், மதிய உணவு தயாராகாததால், கணவன் தனக்கு வாங்கி அனுப்பியிருந்த இரண்டு மாம்பழங்களில் ஒன்றை சிவனடியார் ஒருவருக்கு வழங்கி அவரது பசியைத் தீர்த்தார். இந்நிகழ்வு சுமூகமாக ஓடிக்கொண்டிருந்த அவரது வாழ்க்கையில் பிரச்சனையை ஏற்படுத்திற்று. வீட்டுக்கு வந்த கணவன் எஞ்சியிருந்த மாம்பழத்தை உண்டபோது அது சுவையாக இருக்கவே, அடுத்ததையும் தரும்படி கேட்டான். சிக்கலுக்குள் மாட்டிக் கொண்ட புனிதவதி சிவனிடம் பிராத்தித்தபோது மாம்பழம் வழங்கப்பட்டது. அதை உண்ட அவரது கணவன் அது மேலும் சுவையாய் இருப்பதைக் கண்டு அது, தான் அனுப்பியப் பழம் இல்லை என்பதை உணர்ந்து, காரணத்தைக் கேட்டான். பொய் சொல்ல முடியாத புனிதவதியார் கணவனுக்கு வெளிப்படுத்தினார். இதை நம்பாத கணவன், பரிகாசமாகச் சிரித்துக்கொண்டே மேலும் ஒன்றைத் தரும்படி கேடடான். இதையும் அவர் செய்தார். இதைக் கண்டு அதிர்ச்சியுற்று அந்தரப்பட்ட அவள் கணவன் “ஆத்ம சக்தியையும் தெய்வீக ஈடுபாட்டையும் உணர்ந்து அவள் சாதாரணப் பெண்ணல்ல என்பதை அறிந்தான்” (1997 42) என அதன் கதை செல்கின்றது. இங்கு புனிதவதியாராகிய காரைக்கால் அம்மையாருக்கும் அவளுடைய கணவருக்குமானப் பிரிவிற்கு மாம்பழம் காரணமாக இருந்து விடுகின்றது.

சூன் மாதம் (சித்திரை, வைகாசி) என்பது இளவேனிற் காலமாகும். இம்மாதத்தில் மாங்கனி இறைத்தல் விழா நடைபெறுகின்றது. இம்மாதத்திலேயே காம விழாவும் கொண்டாடப்பட்டு காமன் எரிக்கும் நிகழ்வும் நடைபெறுகின்றது. இதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

## காமனும் மாமரமும்

மாம்பூவும் மாமரமும் காமனோடு தொடர்புடையதாக இருக்கின்றது. தமிழ் நிலத்தில் காமன் விழா இளவேனிற் காலத்தில் (சித்திரை, வைகாசி) கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவில் காமனுக்கு விருப்பமான "மாம்பூ" இடம் பெறுகின்றது. மாம்பூ இளவேனிற் காலத்தில் பூக்கும் இயல்பினைக் கொண்டது. இப்பூவின் நாற்றம் காமத்தைத் தூண்டும். இதனால் இப்பூ காமனோடு தொடர்புடையதாக இருக்கலாம் எனத் தோன்றுகின்றது. காமனின் கொடி மகரக் கொடியாகும். மகரம் என்ற சொல்லிற்கு, "மாமரம்" (தொகுதி 5, 2979) எனப் பொருள் தருகின்றது தமிழ் லெக்சிகன். "மாமரத்தினையே காமனாகக் கருதும் முறையிலும் ஒரு புராணக் கதை உள்ளது. காஞ்சி மகாத்மியம் எனும் நூலில் சிவன் உவமை பேராட்டம் பற்றிய கதையில் அஃது இடம் பெற்றுள்ளது. காஞ்சியில் காமாட்சி தவம் செய்கிறாள். சிவன் அங்கு வந்து அவளைக் கதிரின் ஒளியால் எரிக்கிறான். காமாட்சி தன் தமையனிடம் முறையிட அவன் ஒரு மாமரத்தை நிழலுக்காகத் தருகிறான். சிவன், தேவியையும் மாமரத்தையும் சேர்த்தே எரிக்கிறான். திருமால் தன் அமுதக் கதிர்களினால் ஒரு அமுத குளத்தை ஆக்கி அதில் மூழ்கித் தேவி பிழைக்கிறாள். எரிந்த மாமரமும் உயிர்பெற்றுப் பூத்துக் காய்க்கிறது. இந்த மாமரம் காமனாகிய மரம் என்ற கூறுகின்றனர். இவ்வாறு மாமரத்திற்கும் காமனுக்கும் தொன்று தொட்டு உள்ளதாக ஒரு தொடர்பு தெரிகிறது. அதன் எச்சமாகவே மாம்பூ ஐங்கணைகளுள் ஒன்றாக நிலைத்து நிற்கிறது என்று கருத இடமுள்ளது" என்கிறார் ஜெபக்கனி செல்வராஜ் (Jebakani Selvaraj, 1990). மாமரத்தையும் பார்வதியையும் சிவன் அழித்த செய்தி இதில் அறியப்படுகின்றது. இந்த மாமரத்தைத் தன் தமைக்காக உருவாக்கியவர் திருமால் ஆவர். இதனால் மாமர எரிப்பும் மாமரமாக நின்ற சூரபதுமன் அழிப்பும் சைவ, வைணவ முரண்பாடாகக் கொள்வதற்கும் இடமிருப்பதை அறியமுடிகின்றது.

## ஈடிப்பஸ் சிக்கலில் மாம்பழம்

கிரேக்க இலக்கியங்களில் ஈடிப்பஸ் சிக்கல் குறித்தக் கதைகள் மிகுதியாக இடம் பெற்றிருக்கின்றன. அக்கதைகளில் ஒன்றில், "தனது மகனையே மணந்து கொள்ள நேரும் என்பதை அறிந்த தாய் ஒருத்தி, அதிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைக்கிறாள். அவள் ஒரு காட்டுக்குச் செல்கின்றாள். இங்கு ஒரு மாமரத்தின் பழத்தைப் புசிக்கின்றாள். அந்த மாமரத்தின் கீழ் ஏற்கனவே ஓர் அரசன் சிறுநீர் கழித்திருக்கிறான். அவள் கருவுறுகிறாள். ஓர் ஆண் மகவைப் பெற்றெடுக்கிறாள்" என அதன் கதை ஈடிப்பஸ் சிக்கலை நோக்கிச் செல்கின்றது (Bakthavatchala Reddy, 2003). இதில் மாமரத்தில் சிறுநீர் கழித்தவன் அவனது மகன் என்றும் தன் மகனின் அணுவைச் சுமந்து தாய் கருவுறுகிறாள் என்றும் இந்த உண்மை தெரிந்தபின் அவள் தன்னை மாய்த்துக்கொள்கிறான் என்றும் உரைக்கப்பெற்றிருக்கின்றது.

## முருக - விநாயகரும் மாம்பழமும்

சிவக்குடும்பத்திற்கு ஒரு மாம்பழம் கிடைக்கின்றது. இந்தப் பழத்தைத் துண்டாக்காது உண்ண வேண்டும் என் ஒரு நிபந்தனையும் (சிக்கலையும்) மாம்பழம் கொடுத்தவரால் உரைக்கப்படுகின்றது. இந்தப் பழத்தை விநாயகரும் அவர் தம்பி முருகனும் ஒரு சேரப் பெற விரும்புகின்றனர். பழம் துண்டாக்கக் கூடாது என்பதால், உலகத்தை முதலில் சுற்றி வருபவருக்கு முழுப்பழமும் என சிவன் உரைக்கின்றார். உடனே உலகத்தைச் சுற்ற முருகன் தன் மயில் வாகனத்தில் செல்கிறார். விநாயகரோ தாய், தந்தையரே உலகம் என உரைத்து, அவர்களை ஒரு முறை சுற்றி, முழுப்பழத்தைப் பெற்றுவிடுகிறார். இதை அறிந்த முருகன் கோபம் கொண்டு சிவக் குடும்பத்தை விட்டுப் பழநி சென்று, தனக்கானத் தனி ஆட்சி அதிகாரத்தைக் கட்டமைத்துக் கொள்கின்றார் என அதன் கதை வடிவம் செல்கின்றது.

## சூர வதம்

மாம்பழத்தின் மீது இருந்த வெறுப்பு மா மரமாக நின்ற சூர பதுமன் மீதும் ஏற்படுகின்றது. சூர பதுமன் என்ற பாத்திரம் முருகனின் வெறுப்பைத் தீர்ப்பதற்காகவே படைக்கப்பெற்றதாகத் தெரிகின்றது. இதை அகநானூறு (59.10-11), புறநானூறு (23.3-4), பரிபாடல் (5.1), சிலப்பதிகாரம், திருமுருகாற்றுப்படை (45-46), பெரும்பாணாற்றுப்படை (457-458) போன்றவையும் வெளிப்படுத்துகின்றன.

பிரம்மனுக்குத் தட்சன், காசிபன் என்ற இரண்டு மகன்கள் இருந்தனர். (இவர்களின் தாயைப்பற்றியக் குறிப்பு இடம் பெறவில்லை). இவ்விருவர்களில் தட்சன் தவத்தால் சிவனிடம் வரங்களைப் பெற்றதோடு சிவனுக்கு மாமனாரகவும் ஆகியவன், சிவனிடம் கொண்ட பகையால் சிவ கணங்களில் (சிவனால் தேவை கருதி உருவாக்கப்பட்டவர்கள் சிவகணம் என அழைக்கப்படுகின்றனர்) ஒருவரான வீரபத்திரரால் கொல்லப்படுகிறான். முருகன், பார்வதியின் மகன் என்பதால் தட்சன் முருகனுக்குத் தாத்தாவாக ஆகிறான்.

பிரம்மனின் இரண்டாவது மகனான காசிபன் கடும் தவத்தால் பல வரங்களைச் சிவனிடம் பெறுகிறான். இவன் தவ வலிமையை அழிக்கும் பொருட்டு சுக்கிராச்சாரியார் (அசுர குரு) மாயை என்ற பெண்ணை ஏவுகிறான். இவளின் அழகில் மயங்கி தன் தவ வலிமையை இழக்கிறான் காசிபன். இவர்கள் இருவருக்கும் நான்கு மகன்கள் பிறக்கின்றனர்.

1. முதல் சாமத்தில் மனித வடிவம் கொண்டு புணர மனிதத் தலையுடன் சூரபத்மன் (தட்சனே சூரபத்மனாக மறுபிறவியில் பிறந்திருக்கிறான் என உரைப்பாரும் உண்டு)
2. இரண்டாம் சாமத்தில் சிங்க வடிவம் கொண்டு புணர சிங்கமுகத்துடன் சிங்கன்
3. மூன்றாம் சாமத்தில் யானை வடிவம் கொண்டு புணர யானை முகத்துடன் தாரகன்
4. நான்காம் சாமத்தில் ஆட்டு வடிவம் கொண்டு புணர ஆட்டுத் தலையுடன் அஜமுகி (பெண்)

இவர்களிடம் காசிபன் வடதிசை சென்று சிவனை வணங்கி வரங்கள் பெறுமாறு வேண்ட அதன்படி சூரபதுமன் 108 யுகங்கள் உயிர்வாழவும் 1008 அண்டம் அரசாளவும் ஞாலம் என்னும் தேரையும் வரமாகப் பெற்றான். பெண் வயிற்றில் பிறக்காதப் பிள்ளையால் தனக்கு இறப்பு நிகழவேண்டும் என்ற வரத்தைப் பெறுகிறான். அண்டம் முழுவதையும் அரசாண்டு ஆதிக்க உணர்வில் இந்திரனையும் கொடுமைப்படுத்துகிறான். இவனுக்குப் பயந்து இந்திரன் பூலோகம் வந்துவிடுகிறான். சூரபத்மனுக்குப் பயந்து தேவர்கள் சிவனை வேண்ட, தன் ஆறு நெற்றிக் கண்களைத் (ஈசானம், தத்புருஷம், அகோரம்-அகோரி, வாமதேவம், சத்யோஜாதம், அதோ முகம் -மனம்) திறந்து ஆறு தீப்பொறிகளை உருவாக்குகிறார். இந்தப் பொறிகளை வாயுபகவான் எடுத்துச் சென்று தாமரை மலர்கள் மீது சேர்த்தார். இதில் வளரும் குழந்தைகளுக்குக் கார்த்திகைப் பெண்டிர் பால் ஊட்டினர். தேவர்கள் வேண்ட காசிபரின் பிற பிள்ளைகளை ஐந்து நாட்களில் அழித்தபின் ஆறாவது நாளில் வீரபாகுவை அனுப்பி சூரபதுமனை எச்சிரிக்கின்றான். சூரபதுமன் முருகனை எள்ளிப் பேச, தன் ஆற்றலைக் காட்டினான் முருகன். இதனால் சரணாகதி ஆவதாக முருகனிடம் கூற, முருகனும் சரணாகதி தத்துவத்தை உரைக்கின்றான். அதன் பின் சூரபதுமன் தன் இயல்பானக் குணத்தை வெளிப்படுத்த முருகன் சூரபதுமனுக்குத் தன்னிடம் கற்ற சரணாகதி மந்திரத்தை மறக்கச் செய்கின்றான். இதிலிருந்து தப்ப சூரபதுமன் மாமரமாகி நின்றான். இந்த மாமரத்தைப் பார்வதியிடம் பெற்ற வேலைக் கொண்டு இரு கூறாகப் பிளக்கின்றான் முருகன். மாமரத்தின் ஒரு பகுதி மயிலாகவும் மறுபகுதி சேவலாகவும் ஆக்கப்பெற்றதாகப் புராணம் மரபு கற்பிக்கின்றது. “முருகனின் அவதார நோக்கம் சூரனை அழிப்பதேயாகும். ஆணவமாம் சூரணையும் கன்மமாம் சிங்க முகனையும் மாயையாம் தாருகானையும் ஞானமாம் வேல் கொண்டு வென்றவன் முருகன்” எனக் குறிப்பிடுகின்றார் கி. சிவக்குமார் (Sivakumar, 2006). இந்த இடம் மாம்பாடு என அழைக்கப்படுகின்றது. இவ்வூரில் இன்றுவரை மாமரம் வளர்வதில்லை என்பதை அவ்வூர் மக்கள் குறிப்பிட்டதாகத் தினமலர் பதிவிடுகின்றது.

## சிக்கலும் மாம்பழமும்

மா, பலா, வாழை என்ற மூன்றும் முக்கனிகளாக அறியப்படுகின்றது. இதில் முதலாவதாக இடம் பெறுவது மாம் பழமாகும். இந்திய வேதங்களில் மாம்பழம் குறித்தப் பதிவு மிகுதியாக இடம் பெற்றிருக்கின்றது. இதனால்தான் இந்திய தேசியப் பழமாக மாம்பழம் கொண்டாடப்படுகின்றது. கடவுள்களுக்குப் பிடித்த உணவுகளில் மாம்பழம் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றது.

மாமேனி என்ற சொல் பெரும்பாணாற்றுப்படை (160), நற்றிணை (6-2, 93-10, 304-6), குறுந்தொகை (168-4, 331-7), கலித்தொகை (102-36), அகநானூறு (229-14, 237-7, 270-10), களவழி நாற்பது (32-1) போன்றவற்றில் காணப்படுகின்றது.

மாமலர் என்ற சொல் பெரும்பாணாற்றுப்படை (216), நற்றிணை (67-6, 78-2, 96-1), குறுந்தொகை (317-3, 397-2), கலித்தொகை (130-11), அகநானூறு (5-24, 126-4, 230-2, 257-1, 395-2), புறநானூறு (100-5, 235-18), மணிமேகலை பதிகம் (37, 3-16, 78, 82, 151) போன்றவற்றில் காணப்படுகின்றது. மாமலர் குவளை, மாமலர் நாற்றம், மாலர் மாலைகள் போன்ற சொற்கள் மணிமேகலையிலும் (11-38, 3-3, 3-50), மாமலர் நெடுங்கண் (6-174, 8-16, 118, 13-49), மாமலர்மாரி (23196), மாமலர் வாளி (15-101) போன்றவை சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்றிருக்கின்றன. இவ்விடங்களில் எல்லாம் மாமரமும் மாம்பூவும் மாம்பழமும் செய்தியாக மட்டுமே பதிவு செய்யப்பெற்றிருக்கின்றது.

நன்னன் அழிவிற்கும் காரைக்கால் அம்மையாரின் குடும்ப சிதைவிற்கும் சிவக்குடும்ப சிதைதலுக்கும் ஈடிப்பஸ் சிக்கல் தோன்றுவதற்கும் பார்வதி எரிப்பிற்கும் மாம்பழம் அல்லது மாமரம் காரணமாக இருந்திருக்கின்றது. இவ்வாறு சிக்கல் அல்லது முரண் தோன்றுகின்ற இடங்களில எல்லாம் மாம்பழம் சரியாக இடம் பெற்றிருக்கின்றது. இதனால் மாம்பழம் என்பது சிக்கலை உருவாக்குகின்ற ஒரு குறியீட்டுப் பொருளாக நிற்கின்றதா? அல்லது மாம்பழம் குறித்தக் குறியீடு பிறிதொரு பொருளை ஏதேனும் கொண்டிருக்கின்றதா? என்ற வினா எழுகின்றது. இவ்வினாக்களுக்கு மிகுதியான விடை நமக்குக் கிடைக்கின்றது. ஆனாலும் இங்கு முருகன் விநாயகர் பிரிவிற்குக் காரணமான சிக்கலை மட்டும் இப்பகுதி விளக்குகின்றது.

சூதம், சூதகம் என்ற சொல்லிற்கு, "மாமரம்" (2014, ப.270) எனப் பொருள் தருகின்றது ந.சி. கந்தையா செந்தமிழ் அகராதி. சூது என்ற சொல்லிற்குத் தீய நோக்கத்துடன் ஏமாற்றுதல் என்பது பொருளாகும். சூது + அகம் என்ற சொல்லின் இணைப்பே சூதகம் என்பதாகும். இதில் வரும் அகம் என்பதற்கு மனம் என்பது பொருளாகும். மனதில் அழுக்கான ஏமாற்று எண்ணத்தைக் கொண்டிருப்பது சூதகம் எனப்படுகின்றது. (பெண்களின் மாதவிடாயக்கு சூதகம் என்று பெயர். மங்கை சூதகமானால் கங்கையில் மூழ்கலாம். கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது என்பர் கலைஞர் கருணாநிதி. தினமலர்.19.01.2015) சூதகர் என்பது மனதில் அழுக்கான ஏமாற்று எண்ணத்தைக் கொண்டிருப்பவர் என்பது பொருளாகும். இதனால் மாமரம், மாம்பழம் என்ற குறியீடுகள் ஏமாற்றாடோடும் சூழ்ச்சியோடும் தீட்டோடும் தொடர்புடைய ஒன்றாக அக்காலத்தில் கருதியிருக்க வேண்டும். இதையே மேற்குறிப்பிட்ட மாம்பழம், மாமரம் தொடர்பான கதைக் குறியீடுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

## மாம்பழமும் பொது எண்ணங்களும்

1. தமிழ்த் தெய்வமான முருகன் சிந்தனை அற்றவன் (உலகைச் சுற்றச் செல்லல்) என்றும் ஆரிய தெய்வமான விநாயகர் அதீத சிந்தனை கொண்டவர் (உலகமே தாய் தந்தைதான் என உணர வைத்தல்) என்றும் சமூக வெளிகளில் காட்டுவதற்கு அதாவது முருகனை விட விநாயகர் திறன் உடையவர் என்பதைக் காட்ட இக்கதை அன்று உருவாக்கப்பட்டிருக்கலாம்.
2. சிவக்குடும்பத்துடன் முருகன் முதலில் இணைக்கப்பட்டபின் இரண்டாவதாக இணைக்கப்பட்டத் தெய்வமாக விநாயகர் இருக்கவேண்டும்
3. விநாயகர் சிவக்குடும்பத்துடன் இணைவதை முருகன் விரும்பவில்லை. இதனால் கோபம் கொண்டு பழநி சென்றிருக்கலாம். அல்லது இருவேறு குழுக்களின் இணைப்பில் எழுந்த முரணே மாம்பழ முரணாகவும் இருக்கலாம்.

4. மர வழிபாட்டுக் குழுவிற்கும் விலங்கின வழிபாட்டுக் குழவிற்கும் இடையிலான முரணின் இணைப்பாக இவற்றைக் காணலாம்.
5. மர வழிபாட்டை சிவன் ஏற்றதால் விலங்கின வழிபாட்டைக் கொண்டிருக்கின்ற முருகன் சிவனை விட்டு நீங்கிக் கோபம் கொண்டு சென்றிருக்கலாம்.
6. மாமரத்தை வீழ்த்தி அதை மயில் சேவலாக மாற்றுவதன் மூலம் மரவழிபாட்டுக் குழுவைத் தன் விலங்கின வழிபாட்டுக் குழுவுடன் முருகன் இணைத்தான் என்பதாகவும் இவற்றைக் காணலாம்.

## பங்காளிக் காய்ச்சலும் உளப்பகுப்பாய்வும்

பங்காளிக் காய்ச்சல் என்பது இன்று உலகத்தில் எல்லா மனிதர்களிடமும் காணப்படுவதாகும். “பகை” என்ற சொல்லிற்கான மாற்றுச் வடிவச் சொல்லே காய்ச்சல் என்பதாகும். உடன் பிறந்த பங்காளிகள் அல்லாத பிறர் மீது கொள்ளும் வெறுப்பை பகை அல்லது காய்ச்சல் எனக் குறிப்பிடலாம். ஆனால் உடன் பிறந்த பங்காளிகளுக்குள் ஏற்படுகின்ற பகையைக் குறிக்கப் “பங்காளிக் காய்ச்சல்” என்ற சொல் பயன்படுகின்றது. இதை உளவியலாளர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். பங்காளிக்காய்ச்சல் ஏற்படுவதற்கு அவர்களின் (அண்ணன், தம்பி) உள்ளத்தில் ஏற்படக்கூடிய தொடர்த் தாக்க உணர்வுகளே காரணமாகும். இந்தத் தாக்க உணர்வினாலே பங்காளிக் காய்ச்சல் ஏற்படுகின்றது. இந்தக் காய்ச்சல் குறியீடாகவோ அல்லது செயல் வடிவத்திலோ இருப்பதை சமூக வெளிகள் நமக்கு உணர்த்துகின்றன. இவ்வெளிப்படுத்துதலுக்கு நனவிலி மனதில் அழுந்தக் கிடக்கும் ஏக்கம், வெறுப்பு என்ற உணர்வுகளே காரணமாக அமைகின்றன. “ஒரு குழந்தை தனக்கு அடுத்ததாகத் தாய் பெற்றெடுக்கும் குழந்தையைத் தன்னுடைய பங்காளியாக, தாய்க்கும் தனக்கும், குடும்பத்தார் மற்றும் சொத்துக்கும் தனக்கும், உள்ள உரிமையைப் பங்குபோட வந்துள்ள ஒன்றாகக் கருதி அதன்மீது வெறுப்புக் கொள்கிறது. இவே பங்காளிக் காய்ச்சல் எனப்படும்” (Bakthavatchala Reddy, 2003) எனக் குறிப்பிடுகின்றனர் உஷா நம்பூதிரிபாடு, ச.பிலவேந்திரன் ஆகியோர். இதில் மூத்தப் பிள்ளைக்குத்தான் பங்காளிக் காய்ச்சல் ஏற்பதுவதாக உளவியளாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதை விளக்குவதற்குக் கீழ்க்கண்டப் பாடலைச் சான்றாக அவர்கள் காட்டுகின்றனர்.

“மாவாளியாம் மாவாளி
மாவாளிக்காரன் பெண்டாட்டி
மரக்கால் புள்ளை பெத்தாளாம்
எடுக்க வந்த சீமாட்டி
இடுப்பொடிந்து செத்தாளாம்
பாக்க வந்த சீமாட்டி
பல்லொடைந்து போனாளாம்
கேக்க வந்த சீமாட்டி
கீழே விழுந்து போனாளாம்
சும்மா வந்த சீமாட்டி
சுருண்டு விழுந்து செத்தாளாம்”

என அமைந்திருக்கின்றது. இதில் தன் தந்தையை மாவாளி என்றும் தன் தாயை மாவாளியின் பெண்டாட்டி என்றும் தனக்குப் பின் பிறந்திருக்கின்ற குழந்தையை மரக்கால் என்றும் குறிப்பிடுகின்றான் முதலில் பிறந்த பிள்ளை. மகரக்கால் என்பது உயிரற்ற ஒரு பொருளாகும். தனக்குப் பின் பிறந்திருக்கின்ற பிள்ளையை உயிரற்ற ஒரு பொருளாகப் பார்க்கிறான் மூத்தவன். இந்த மரக்காலைப் பார்க்க வந்தவர்களின் நிலையையும் எடுத்துக்காட்டுகிறான் அவன். இக்காட்டலும் இச்சுட்டலும் மூத்தக் குழந்தையின் மன வெளிப்பாட்டையும் பிறந்தக் குழந்தையின் மீது உள்ள வெறுப்புணர்வையும்

உணர்ந்து கொள்ளலாம். உளப்பகுப்பாய்வில் புறச்சாட்டுதல் என்பது முக்கியமான ஒன்றாகும். “புறச்சாட்டுதல் என்பது ஒருவரின் உள்ளக்கிடக்கையில் உண்மையில் என்ன இருக்கின்றதோ அதனைப் பிறர் மேலோ பிற சூழல் மீதோ அல்லது பிற எதார்த்தத்தின் மீதோ ஏற்றிக் கூறும் செயல் ஆகும் என ஃபிராய்ட் குறிப்பிடுவார். பிறவற்றின் மீது ஏற்றிக் கூறப்படும் இந்த உணர்வு என்பது பொதுவாக ஒருவரின் மனத்தின் அடியாழத்தில் கிடக்கும் வலி தரக்கூடிய, ஏற்றுக்கொள்ள முடியாத அல்லது ஒரு தடைசெய்யப்பட்ட ஒன்றாகவே இருக்கும்” (2003, ப.363) எனக் குறிப்பிடுகின்றனர் உஷா நம்பூதிரிபாடு, ச.பிலவேந்திரன் ஆகியோர். இந்த நிலையே முருகன் மனதில் எழுந்திருக்கின்றது. பொதுவாக மூத்தப் பிள்ளைக்குத்தான் பங்காளிக்காய்ச்சல் ஏற்படுவதாக உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். சிவன் குடும்பத்தில் மாம்பழப் பங்கீட்டில் இளையவனுக்குப் (முருகனுக்குப்) பங்காளிக் காய்ச்சல் ஏற்படுகின்றது. இந்தப் பங்காளிக் காய்ச்சல் விநாயகர்மீதும் விநாயகரால் சூழ்ச்சியால் தட்டிப்பறிக்கப்பட்டு தனக்குக் கிடைக்காத மாம்பழத்தின் மீதும் ஏற்பட்டிருக்கின்றது.

வேள் என்ற சொல்லிற்கு விரும்புதல் என்னும் பொருளுடையது ஆகும். விரும்பப்படும் தன்மையினைக் கொண்டுள்ளதால் முருகன், செவ்வேள் என அழைக்கப்படுகின்றான். செவ்வேள் என்பதற்கு சிவந்த வேலினைக் கொண்டிருக்கின்றவன் என்ற பொருளை உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். வேள் என்பதற்கு விரும்புதல் என்ற பொருள் இருப்பதால் இச்சொல்லிற்கு முன் வரும் “செவ்” என்ற சொல்லிற்கு செம்மை எனப் பொருள் கொண்டு சிகப்பு என உரைக்காது நேர்மை, பெருமை என்ற பொருளோடு அறநெறி மிக்க உயர்ந்த வரம்புகளைக் கொண்ட பொருள் எனக் கொள்ளுதல் வேண்டும். முருகன் விரும்புகின்ற பொருள், பெருமை, அறநெறி மிக்க உயர்ந்த மிக்கவைகளில் ஒன்று என உணரமுடிகின்றது. பெருமை மிக்கவைகளில் மாம்பழமும் ஒன்றாகும். மாம்பழம் என்ற மேன்மை மிகுந்த ஒன்றை விரும்பிய பின்னர் அது கிடைக்காதபோது அல்லது சூழ்ச்சியால் தட்டிப் பரிக்கின்றபோது ஏற்படுகின்ற வலி வேதனை அதீதமானதாகும். இந்த அதீத வலி வேதனையே தன் அண்ணன் விநாயகர் மீது வெறுப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

மாம்பழம் இனப்பெருக்கத்திற்கான ஒரு குறியீடாகவும் பார்க்கப்பட்டிருக்கலாம். “இந்துக்களின் இரண்டு பெரிய சமய உட்பிரிவுகளில் ஒன்றின் தலைமைக் கடவுளாக சிவபெருமான் விளங்கலானார். லிங்க வழிபாடு தொடர்ந்து நடைபெறலாயிற்று. இனப்பெருக்கம் குறித்த வழிபாட்டு மரபுகள் விரிந்து பரவின” (1996, ப.21) எனகிறார் சியாமா சரண் தூபே. சிவ லிங்க வழிபாடு இனப்பெருக்கத்தின் குறியீடு என்பதை அறியமுடிகின்றது. இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் மேலக்கொடுமநல்லூரில் குமரையா என்ற முருகன் கோயில் அமைந்திருக்கின்றது. இக்கோயிலில் வைகாசி மாதம் மாம்பழ பூசை என்ற பெயரில் திருவிழா ஒன்று நடைபெறும். இங்கும் மாம்பழம் இறைக்கப்படுகின்றது. இது மாம்பழத்தின் மீது இருந்த முருகனின் காய்ச்சல் நன்கு வெளிப்படுகின்றது. இதைப்போல காரைக்காலில் ஒவ்வொரு ஆண்டும் சூன் மாதம் நடைபெறுகின்ற மாம்பழம் இறைத்தல் திருவிழாவின் நோக்கம் இனப்பெருக்கம் வேண்டியே ஆகும். இந்த விழா காரைக்கால் அம்மையாரை நினைவுபடுத்தினாலும் அவ்வட்டார மக்களின் பொதுக்கருத்தாகக் குழந்தைப் பேறு என்பதைக் களப்பணியில் காணமுடிந்தது. காரைக்கால் அம்மையாரின் நினைவு நாளில் மாம்பழத்தைத் தெருக்களில் இறைப்பதன் வழி அம்மையாரைச் சாந்தப் படுத்த முயல்கின்றனர். மாம்பழத்தால் தன் குடும்பம் சிதைந்ததை ஏற்காத அம்மையார் மாம்பழத்தின் மீது ஒருவித காய்ச்சலைக் கொண்டிருக்கின்றார். அம்மையாருக்குப் பிடிக்காத ஒன்றை அவ்வட்டாரத்தில் வாழ்ந்த மக்களும் மாம்பழத்தைப் பிடிக்காத வண்ணம் காட்டி, அம்மயாரின் மனதை சாந்தப்படுத்த முயற்சிக்கின்றனர். இதன் வெளிப்பாடே மாம்பழத்தைத் தெருக்களில் இறைப்பதாகும். தனக்குப் பிள்ளைப்பேறு உண்டாகாது காரைக்கால் அம்மையார் வருந்தியதைப் போல, இவ்வட்டார மக்களும் வருந்தக் கூடாது எனப் புனிதவதியார் எண்ணித் தங்களுக்குப் பிள்ளைப்பேறு உண்டாகச் செய்வார் என்ற கருத்தாக்கத்தின் வெளிப்பாடாக மாம்பழம் இறைத்தலின் செயல் நடைபெறுகின்றது.

இதனால் மாம்பழம் என்பது ஒரு பெண்ணைக் குறிக்கின்ற ஒரு குறியீடு என உணரமுடிகின்றது. மகாபாரதத்தில் பெண்ணை “பெண்” எனக் குறித்தே பங்கீடு செய்யப் பெற்றிருக்கின்றது. சிவக்குடும்பத்தில் பெண்ணை மாம்பழம் என்ற குறியீட்டில் பங்கீடு செய்ய முனைந்திருக்கின்றனர். மகாபாரதப் (வைணவப்) பங்கீடு சுமூகமாக இருக்க, சிவக்குடும்பத்தில் முருகன் தவிர்க்கப்பெற்று

விநாயகன் அதைப் பெறுகிறான். முருகனுக்கு மாம்பழம் என்ற குறியீட்டுப் பொருள் கிடைக்காததைப் பார்வதியால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இதன் வெளிப்பாடு விநாயகருக்குக் கிடைத்த மாம்பழக் குறியீட்டை விநாயகர் தொடர்ந்து தக்க வைக்க இயலாமையாகும். "விநாயகரைப் பற்றிய ஒரு கிளைக்கதை. ஒருமுறை பார்வதி விநாயகரிடம் யாரை மணக்க விரும்புகிறாய் எனக் கேட்கிறாள். விநாயகரோ உன்னைப்போல இருக்கும் ஒருத்தியையே மணக்க விரும்புகிறேன் என்று கூற, பார்வதி கோபமடைகிறாள். அவள் விநாயகரை கடைசி வரை திருமணமே செய்து கொள்ளாமல் இருக்கக் கடவாய் எனச் சாபமிடுகிறாள்" (Bakthavatchala Reddy, 2003) எனக் குறிப்பிடுகின்றனர் உஷா நம்பூதிரிபாடு, ச.பிலவேந்திரன் ஆகியோர். இந்த சாபம் தன்னைப் (தாயைப்) போல் பெண் வேண்டல் என்பதாக சமூக வெளிகளில் கற்பிக்கப் பெற்றிருக்கின்றது. இச்செயல் முருகனுக்குக் கிடைக்காத ஒன்றை இவன் (விநாயகர்) பயன்படுத்துவதோடு மட்டும் அன்றி தொடர் வாழ்வியலிலும் அதைக் கிடைக்கா வண்ணம் செய்ததன் வெளிப்பாடே இக்கதையாகும். இதனால்தான் பிள்ளையார் திருமணம் ஆகாதவராகத் தமிழ் நிலத்தில் பேசப்பெறுகின்றார். கிடைக்காத ஏக்கத்தில் இருந்த முருகனுக்கு இரண்டு மனைவிகளைக் கொடுத்து அவனை சமாதானம் செய்ய முயன்றிருக்கின்றனர். இதை முருகன் ஏற்றுக்கொண்டாலும் சூழ்ச்சியால் ஏமாற்றப்பட்டதை மறக்க இயலாததன் வெளிப்பாடே மாம்பழத்தின் மீதும் மாம்பழத்தைத் தருகின்ற மா மரத்தின் மீதும் காய்ச்சலாகும். இந்தக் காய்ச்சலால்தான் மாமரமாக நின்ற சூரபதுனை வீழ்த்தியிருக்கின்றது. பிள்ளை என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் மிகுதியாகப் பயின்று வந்திருக்கின்றது. ஆனால் பிள்ளையார் என்ற சொல் பயின்று வரவில்லை. பார்வதியின் பிள்ளையாக விநாயகர் கற்பிக்கப்பட்டாலும் பார்வதிக்கு விநாயகர்மேல் முருகனை ஒப்பிடும்போது அன்பு குறைவாகவே இருந்திருக்கின்றது என்பதை இக்கதை வெளிப்படுத்துகின்றது. இதனால்தான் மாமரமாகிய சூரனை அழிக்க தாய் பார்வதி கொடுத்த வேலை முருகன் பயன்படுத்துகிறான். தனக்குக் கிட்டாத அல்லது தன்னால் பெற இயலாத ஒன்றைப் போராடி பெறல் அல்லது அவற்றை அழித்தல் என்பது மனக்கிளர்ச்சியின் வெளிப்பாடாகும். இந்த வெளிப்பாடே மாமரமாக நின்ற சூரனை அழித்த முருகன் மனதிலும் இருந்திருக்கவேண்டும்.

தாய், தந்தையர்தான் உலகம் என்ற விநாயரின் கருத்திற்கு உடன் பட்ட தந்தையர், தாய் மீது வெறுப்பு வருகின்றது. இந்த வெறுப்பே உலகத்தை எடுத்து கடலுக்கு அடியில் மறைத்து வைத்த செயல் எனவும் கருதுவதற்கு இடம் இருப்பதாகத் தோன்றுகின்றது. உலகத்தை மறைத்து வைத்தல் என்பது தந்தை, தாயை மறைத்து வைத்தன் வெளிப்பாடாகும். இதன் அடிப்படையில் தந்தைக்குப் புத்தி சொன்னதையே "தந்தைக்கே மந்திரம் சொன்ன சுப்பையா" என்றும் அப்பனுக்கு பாடம் சொன்ன சுப்பையா என்றும் முருகனுக்கு பெயர் அடையாக அமைந்திருக்கின்றது என்று எண்ணவும் தோன்றுகின்றது. இது பிறிதொரு ஆய்வை நோக்கிச் செல்வதாகும்.

## முடிவுரை

மாம்பழம் சுவையான ஒன்றாக இருந்தாலும் கூட புராணங்களில் மாம்பழம் சிக்கலுக்குரிய ஒன்றாகவே காட்டப்பெற்றிருக்கின்றது. நன்னன் என்ற சங்கப் புலவனின் வீழ்ச்சி மாம்பழத்தால் நிகழ்ந்ததை குறுந்தொகை எடுத்துக்காட்டுகின்றது. இதைப்போல மாம்பழத்தால் காரைக்காலைச் சேர்ந்த புனிதவதியாரின் இல்வாழ்வும் வீனாகியிருக்கின்து. பார்வதியை சிவன் எரிக்கின்றபோது தன் தமக்கையைக் காக்க மாமர நிழலை ஏற்படுத்துகிறார் திருமால். சிவன் பார்வதியையும் திருமால் உருவாக்கிய மாமரத்தையும் எரிக்கின்றான் சிவன். கிரேக்கத்தில் மகனை மனப்பதற்கு மாம்பழம் காரணமாக இருந்த செய்தியும் பெறப்படுகின்றது. தமிழ் நிலத்தில் விநாயகர், முருகன் குறித்தக் கதைகள் மிகுதியாகவே இடம் பெற்றிருக்கின்றன. அக்கதை வடிவங்களில் மாம்பழம் குறித்தக் கதையும் சிவன் குடும்பம் சிதைந்த கதையும் இதில் அடங்கியிருக்கின்றது. மாம்பழத்தைப் பெறுவதில் ஏற்பட்ட போட்டியில் முருகன் தோல்வியடைகிறான். இதனை ஏற்க இயலாத முருகன் விநாயரின் மேல் காய்ச்சல் கொள்கிறான். இந்தக் காயச்சல் விநாயகர் மேல் மட்டும் அல்லாது மாம்பழம் மீதும் மா மரத்தின் மீதும் ஏற்படுகின்றது. இதைப் பங்காளிக காய்ச்சல் என உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதனால்தான் மாமரமாக நின்ற சூரபதுமனை அழிக்கின்றான். சூரபதுமன் மாமரமாக நின்றதற்கு முருகன் மாமரத்தின் மீது கொண்டுள்ள வெறுப்பைக் காட்டுவதற்கான ஒரு குறியீடு என

உணரமுடிகின்றது. இலக்கியங்கள், அந்த இலக்கியங்கள் எழுந்த காலத்தைக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன என்பதை அதன் பதிவுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஆனால் புராணங்கள் புராணம் எழுந்த காலத்தை எடுத்துக்காட்டுவனவாக அமையவில்லை. மாறாகத் தான் விரும்புகின்ற சமயக் கடவுளை மக்களிடையில் கொண்டு செல்வதற்கும் அக்கடவுளை மக்கள் கொண்டாடச் செய்வதற்கும் பல கதைகளும் கிளைக்கதைகளும் தேவையான ஒன்றாக சமயப் பரப்புனருக்கு அன்று இருந்திருக்கின்றன. இக்கதை வடிவங்களில் பல்வேறு பொருள் தெய்வத்திற்குரியதாகப் பதிவு செய்யப்படுகின்றது. அதில் ஒன்று மாம்பழம் ஆகும். மாம்பழத்தால் சிவகுடும்பம் பிரிந்த நிலை பேசப்பெற்றிருக்கின்றது. மாம்பழ ஏமாற்றத்தால் தன் அண்ணன் விநாயகர் மீது முருகனுக்குப் பங்காளிக் காய்ச்சல் ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பங்காளிக்காய்ச்சல் மாம்பழத்தின் மீதும் மாமரத்தின் மீதும் ஏற்பட்டு மாமரமாக நின்ற சூரபதுமனை அழித்தல் வரை சென்றிருக்கின்றது என்பது விளக்கப்பெற்றிருக்கின்றது.

## References


Bakthavatchala Reddy, (2003) Nattupuravial Kotpadukal, Thenninthiya Nattupuraviyal Kalagam, Thiruvanantha Puram, Kerala, India

Jebakani Selvaraj, (1990) Manmathan Oor Aivu, Pari-Kabila Pathippagam, Coimbatore, India

Sivakumar, G. (2006) Kalladathil Murugan Perumai, India Palkalaikalagath tamilasiriyar mandram, Madurai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License